අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | අ. පො. ස. සාමාන්‍ය පෙළ 2023(2024)

අනුහුරු ප්‍රශ්න පත්‍රය
மாதிரி வினாத்தாள்
**Model Paper**

# ඉතිහාසය
# வரலாறு
# History





கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை 2023(2024) மாதிரி வினாத்தாள் I- II

අධ්‍යාපන අමාත්‍යාංශය - ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව
கல்வி அமைச்சு மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு

2023(2024)/OL/33/T/Q/T-1

ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

| 33 | T | I |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - අනුහුරු ප්‍රශ්න පත්‍රය- 2023 (2024)
கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை மாதிரி வினாத்தாள் - 2023 (2024)
G. C. E. Ordinary Level Examination – Model paper - 2023 (2024)

ඉතිහාසය I
வரலாறு I
History I

ஒரு மணித்தியாலம்

கவனிக்க
- எல்லா வினாக்களுக்கும் விடையெழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடைக்குரிய இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. கோட்டை முதல் கண்டி இராசதானி வரையிலான வரலாற்றை அறிந்து கொள்வதற்கு பெரிதும் துணைபுரியும் நூலாகக் கருதப்படுவது
(1) கவிசிலுமின (2) சிதத்சங்கராவ
(3) ரசவாஹினி (4) கொன்ஸ்தாந்தினு சட்டன

2. இலங்கையின் புராதன கல்வெட்டுக்கள் எம்மொழியில் எழுதப்பட்டுள்ளன
(1) பிராமிய மொழி (2) பாளி மொழி
(3) சமஸ்கிருதம் (4) பிராகிருத மொழி

3. கஹபண நாணயம் பின்வரும் வேறு எப்பெயரால் குறிப்பிடப்படுகின்றது
(1) யானை மற்றும் சுவஸ்திகா (2) தரண
(3) மஸ்ஸ (4) அக

4. பண்டைய மன்னர்கள் வெளிநாடுகளுடன் திருமணத்தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டதன் நோக்கமாக அமைவது
(1) நல்லுறவை பேணுதல்
(2) பொருளாதார தொடர்புகளை மேம்படுத்திக் கொள்ளல்
(3) பரஸ்பர நம்பிக்கையை வளர்த்துக்கொள்ளல்
(4) அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளல்

5. பண்டைய சமய, இலக்கிய தகவல்கள் மற்றும் வம்சக்கதைகள் எழுதப்பட்டிருப்பது
(1) ஓலைச்சுவடிகளிலாகும் (2) கல்வெட்டுக்களிலாகும்
(3) பொற்தகடுகளிலாகும் (4) செப்புத்தகடுகளிலாகும்

6. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் சுத்தியல் மற்றும் அம்மி போன்ற உபகரணங்களை உருவாக்குவதற்கு பயன்படுத்திய பாறை வகை பின்வருவனவற்றுள் எது?
(1) மஞ்சள்நிற பளிங்குப்பாறை (2) திருவானைக்கல்
(3) சேற்றுக்கல் (4) கருங்கல்

7. கண்டலம கொத்கல்கந்த கல்வெட்டில் **"தொட்டபோஜக"** எனும் பெயரால் குறிப்பிடப்பட்டிருப்பவர்
(1) குடும்பத்தலைவர் (2) கமிக
(3) பருமக (4) யுவராஜா

8. ஆற்றுக்கு அப்பால் குளக்கட்டின் ஓர் அந்தத்தில் குடியிருப்புக்கள் பரவலடைந்த யுகம் எது?
(1) வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (2) ஆரம்ப வரலாற்றுக் காலம்
(3) முன்வரலாற்றுக் காலம் (4) வரலாற்றுக்காலம்

9. ஆரம்ப வரலாற்றுக்கால குடியிருப்புக்கள் கிராமம், நகரம், புரம் என வேறுபடுவதில் செல்வாக்கு செலுத்திய பிரதான காரணியாக அமைவது
(1) குடியிருப்புக்களில் காணப்பட்ட வளங்களின் அளவு
(2) குடியிருப்புக்களில் காணப்பட்ட மக்கள் தொகை
(3) குடியிருப்புக்களில் காணப்பட்ட கட்டிடங்களின் அளவு
(4) குடியிருப்புக்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பின் தன்மை

10. பிராந்திய ஆட்சியாளர்களிடையே நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கில் புனித வெள்ளரசு மரக்கிளை நடப்படும் வைபவத்திற்கு தேவநம்பிய திஸ்ஸ மன்னன் பின்வரும் எப்பிரதேச தலைவருக்கு அழைப்பு விடுத்திருந்தார்.
(1) சந்தனகாம (2) சுமணகாம
(3) விஹார வாபிகாம (4) அநுராதகாம

11. இலங்கை வரலாற்றில் சக்கரவர்த்தி எனும் பெயரில் தன்னை அறிமுகப்படுத்திய மன்னன் யார்?
(1) துட்டகைமுனு (2) மகாசேனன்
(3) மகாபராக்கிரமபாகு (4) நிஸ்ஸங்கமல்லன்

12. பண்டைய காலத்தில் மக்களால் கைவிடப்பட்ட குளக்கிராமங்கள் எப்பெயரால் குறிப்பிடப்படுகின்றன?
(1) கனத்த (2) நிகம்
(3) ஒலகம் (4) பரிகித்தகம்

13. இலங்கை அரசியல் வரலாற்றில் தாய்வழி உரிமையின் மூலம் அரசாட்சி பெற்றுக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பமாக அமைவது
(1) தேவநம்பியதீசனுக்கு பின் உத்தியன் ஆட்சிபீடமேறியமை
(2) ஆறாம் பராக்கிரமபாகுவிற்கு பின் ஜயபாகு ஆட்சி பீடமேறியமை
(3) காவன்திஸ்ஸ மன்னனுக்கு பின் துட்டகைமுனு ஆட்சிபீடமேறியமை
(4) ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்கனுக்கு பின் ஸ்ரீ விஜய இராஜசிங்கன் ஆட்சிபீடமேறியமை

14. கீழே நிரல் I இல் பண்டைய கைத்தொழில்களும் நிரல் II அவற்றுடன் தொடர்புடைய கல்வெட்டுக்களும் தரப்பட்டுள்ளன. அவற்றை சரியாக பொருத்தும் போது பெறப்படும் விடையாக அமைவது

| **நிரல் I** | **நிரல் II** |
|---|---|
| 1. இரும்பு தொழில் | A. முத்துகல்ல கல்வெட்டு |
| 2. தங்கக் கைத்தொழில் | B. வேகிரிய கல்வெட்டு |
| 3. தந்தச் செதுக்கல் | C. மண்டகல கல்வெட்டு |
| 4. நெசவுத் தொழில் | D. வெஹெரகம கல்வெட்டு |
| | E. நெட்டுக்கந்த கல்வெட்டு |

(1) ABDC (2) ACBD (3) BACD (4) BDAC

15. குளத்தில் உருவாகும் அலைகளால் குளக்கட்டு அரிப்புறுவதை தடுப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட குளத்தின் உறுப்பு

(1) மொஹால் (2) தண்ணீர் விளக்கு
(3) அலைதாங்கி (4) கலிங்கல் தொட்டி

16. பண்டைய இலங்கையர் எதனை அளவிடுவதற்காக பரமாணு எனும் அளவீட்டு அலகினை பயன்படுத்தியுள்ளனர்.

(1) நீளம் (2) நிறை (3) நிலம் (4) காலம்

17. பண்டைய இலங்கையர் பால்மடு யாகம் எனும் பூஜையினை மேற்கொண்டமைக்கான காரணம்

(1) மனிதர்களின் கிரகதோஷங்களை நீக்குவதற்கு
(2) தொற்றுநோய்களை கட்டுப்படுத்துவதற்கு
(3) நேத்திக்கடன்களை நிறைவேற்றுவதற்கு.
(4) பசுக்களின் பாதுகாப்பின் பொருட்டு

18. கீழே A- D வரை தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் துட்டகைமுனு மன்னன் தொடர்பில் **பொருத்தமற்ற** கூற்றுக்களைக் கொண்ட விடையாக அமைவது

A. படுகொலைச் சட்டம் பிறப்பிக்கப்பட்டமை
B. முதன் முதலாக இலங்கையில் மத்தியப்படுத்தப்பட்ட ஆட்சியை கட்டியெழுப்பியமை
C. பதினெட்டு வைத்தியசாலைகளை அமைத்தமை
D. ருவன்வெளிசாயவிற்கு வட்டதாகை அமைத்தமை

(1) AC (2) AD (3) BD (4) CD

19. பண்டைய இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட வரிச்சட்டம் தொடர்பில் சரியான கூற்றாக அமைவது

(1) நிஸ்ஸங்கமல்ல மன்னன் காலத்தில் கெதிஅட, கெடுகனக எனும் வரிகள் அறவிடப்பட்டமை.
(2) குளத்து நீரை பயன்படுத்துவோரிடமிருந்து போஜக்கபதி எனும் வரி அறவிடப்பட்டமை
(3) அரசனுக்கு சொந்தமான நிலங்களில் பயிரிடுவோரிடமிருந்து தக்கபதி எனும் வரி அறவிடப்பட்டமை
(4) கால்வாய்களில் மீன் பிடிப்போரிடமிருந்து மதரமஞ்சக்க எனும் வரி அறவிடப்பட்டமை

20. பொலன்னறுவை காலத்தில் பாண்டியவம்ச இளவரசனை மணந்த இளவரசி

(1) மித்தா (2) அனுலா (3) லீலாவதி (4) கல்யாணவதி

21. இலங்கையை ஆட்சி செய்த மன்னர்களின் பெயர்கள் நிரல் I இலும் அவர்களின் ஆட்சிகால முக்கிய நிகழ்வுகள் நிரல் II இலும் தரப்பட்டுள்ளன. அவற்றை சரியாக பொருத்தும் போது கிடைக்கும் விடையினை தெரிவுசெய்க

| **நிரல் I** | **நிரல் II** |
|---|---|
| 1. புவனேகபாகு ஆதிபாதன் | A. பன்சியபனஸ் ஜாதக்கதைகளை சிங்களத்தில் மொழி பெயர்த்தமை |
| 2. முதலாம் புவனேகபாகு | B. செங்கோ தளபதியின் படையெடுப்பு |
| 3. நான்காம் பராக்கிரமபாகு | C. வன்னி தலைவர்களின் கிளர்ச்சியை அடக்கியமை |
| 4. வீர அழகேஸ்வர | D. கோவிந்த மலையில் கோட்டை ஒன்றை அமைத்தமை |

(1) ADCB (2) BCDA (3) DBAC (4) DCAB

22. கம்பளை இராசதானி தொடர்பில் பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க

(1) இதன் ஆரம்ப ஆட்சியாளன் மூன்றாம் புவனேகபாகு ஆவான்
(2) சமகாலத்தில் மேலும் பல இராசதானிகள் செயற்பட்டன
(3) ஆட்சி நடவடிக்கைகளின் போது அழகேஸ்வர பரம்பரையின் உதவி கிடைக்கப்பெற்றது.
(4) தாய்வழி அரசுரிமை முறை காணப்பட்டது.

23. முதலாம் விமலதர்மசூரியன் கண்டி இராசதானியில் சட்டபூர்வ ஆட்சியுரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மேற்கொண்ட செயற்பாடுகளுள் ஒன்றாக அமைவது

(1) போர்த்துக்கேயரின் படையெடுப்புக்களை வெற்றி கொண்டமை

(2) கண்டியின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தியமை

(3) கத்தோலிக்க சமயத்தை கைவிட்டு பௌத்த சமயத்தை தழுவியமை

(4) பர்மாவிலிருந்து உபசம்பதா பிக்குமாரை வரவழைத்தமை

24. கண்டி இராசதானி காலத்தில் பிரதேச ஆட்சியை மேற்கொள்வதற்காக காணப்பட்ட நிர்வாக அலகு யாது?

(1) மாளிகை (2) ரட்டவசம (3) மகாபத்த (4) கோறளை

25. மறுமலர்ச்சிக் காலத்தில் பாரிய மாற்றத்திற்கு உள்ளான கலைப்படைப்பு யாது?

(1) சித்திரக்கலை (2) சிற்பக்கலை

(3) இலக்கியம் (4) கட்டடநிர்மாணக் கலை

26. போர்த்துக்கேய எதிர்ப்புக் கொள்கையை பின்பற்றி போராட்ட வீரராக பிரபல்யமடைந்திருந்த கோட்டை தர்மபாலனின் தந்தை யார்?

(1) டிக்கிரி இளவரசன் (2) அம்புலுகல குமாரன்

(3) சப்புமல் குமாரன் (4) வீதிய பண்டார

27. பொருளாதார நடவடிக்கைகளின் போது முன்வைக்கப்பட்ட அரச தலையிடாக் கொள்கையின் பிரதான பண்பாக அமைவது

(1) அரசின் தலையீடு மிக அதிகமாகும்

(2) பொருளாதார நடவடிக்கைகள் யாவும் அரசை சார்ந்ததாகும்.

(3) அரச தலையீடு குறைவானதாகும்

(4) தனியார் துறையினருக்கான சந்தர்ப்பம் வரையறுக்கப்பட்டதாகும்.

கீழே தரப்பட்டுள்ள கைத்தொழிற்புரட்சியுடன் தொடர்புடைய நிர்மாணங்களை கருத்திற் கொண்டு வினா இலக்கம் 28 இற்கு விடை தருக

A. நீராவி என்ஜின் D. மெக்கடம் முறை

B. ரோலர் இயந்திரம் E. பறக்கும் நூனாழி

C. மியுல் இயந்திரம் F. பாதுகாப்பு விளக்கு

28. மேற்தரப்பட்டுள்ள நிர்மாணங்களுள் நெசவு கைத்தொழில் சார்ந்த நிர்மாணங்களை மாத்திரம் உள்ளடக்கிய விடை

(1) AB (2) CD (3) CE (4) EF

29. கி.பி 1762 இல் இலங்கைக்கு வருகை தந்த ஆங்கிலேய தூதுவனான ஜோன் பைபஸ் சந்தித்த கண்டி மன்னன்

(1) இரண்டாம் இராஜசிங்கன் (2) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

(3) இராஜாதி இராஜசிங்கன் (4) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

30. 1848 இரண்டாம் சுதந்திர போராட்டத்திற்கு ஏதுவாக அமைந்த வரிக் கொள்கையை முன்வைத்த ஆளுநர் யார்?

(1) பிரடரிக் நோர்த்  (2) தோமஸ் மெயிட்லன்ட்

(3) ரொபட் பிரௌண்றிக்  (4) டொரிங்டன்

31. சென்னை நிர்வாகத்தின் கீழ் இலங்கையின் கரையோர பிரதேசத்தை நிர்வகித்த அதிகாரி

(1) கலெக்டர்  (2) அவுமில்தார்  (3) ரெசிடன்ட்  (4) ஆளுநர்

32. அநகாரிக தர்மபால, ஆறுமுக நாவலர், சித்திலெப்பை ஆகியோரின் தலைமைத்துவத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளால் இலங்கையில் எத்துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டது.

(1) அரசியல்  (2) சமயம்  (3) பொருளாதாரம்  (4) சமூகம்

33. கீழே தரப்பட்டுள்ள A- D வரையான கூற்றுக்களுள் குறூமக்கலம் மற்றும் சோல்பரி யாப்பின் பண்புகளை மாத்திரம் முறையே கொண்ட விடையாக அமைவது.

A. வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கப்பட்டமை

B. உத்தியோக சார்பற்றோர் பெரும்பான்மையாக காணப்பட்டமை

C. நிர்வாக குழுமுறை அறிமுகப்படுத்தப்பட்டமை

D. இரு சபை கொண்ட பாராளுமன்றம் அறிமுகப்படுத்தப்பட்டமை

(1) AD  (2) CD  (3) CE  (4) EF

கீழே A- J வரை தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு 35, 36 ஆகிய வினாக்களுக்கு விடை தருக

| **நீர்த்தேக்கம்** | **அணைக்கட்டு நிர்மாணிக்கப்பட்ட இடம்** | **நிதியுதவி வழங்கிய நாடு** |
|---|---|---|
| A. கொத்மலை | D. மினிப்பே அணைக்கு மேற்புரம் | G. பிரித்தானியா |
| B. விக்டோரியா | E. கடதொர எனும் இடம் | H. மேற்கு ஜேர்மனி |
| C. ரந்தெனிகல | F. பொல்கொல்லை நீர்த்தேக்கத்திற்கு சற்று தொலைவில் | J. சுவீடன் |

34. விக்டோரியா நீர்த்தேக்கத்துடன் தொடர்புடைய விடயங்களை மாத்திரம் கொண்ட விடையாக அமைவது

(1) DH  (2) EG  (3) FG  (4) FJ

35. ரந்தெனிகல நீர்த்தேக்கத்துடன் தொடர்புடைய விடயங்களை மாத்திரம் கொண்ட விடையாக அமைவது

(1) DH  (2) EG  (3) FG  (4) FJ

கீழே A, B ஆகிய கூற்றுக்களை வாசித்து 36, 37 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

A. பிரதிநிதித்துவம் இன்றேல் வரியுமில்லை

B. உணவு, நிலம், சமாதானம்

36. அமெரிக்க சுதந்திர போர் தொடர்பில்

(1) A யும் B யும் சரியானவை (2) A யும் B யும் தவறானவை

(3) A தவறானது B சரியானது (4) A சரியானது B தவறானது

37. ரஷ்ய புரட்சி தொடர்பில்

(1) A யும் B யும் சரியானவை (2) A யும் B யும் தவறானவை

(3) A தவறானது B சரியானது (4) A சரியானது B தவறானது

கீழே ABCD என தரப்பட்டுள்ள கூற்றுச்சோடிகளை கவனத்திற் கொண்டு 38 – 40 வரையான வினாக்களுக்கு விடை தருக

A. 1. மன்னராட்சி
   2. கூட்டு விவசாயப் பண்ணை

B. 1. சரஜிவோ நிகழ்வு
   2. செவ்விந்தியர்

C. 1. முதலாம் உலகப் போர்
   2. சர்வதேச சங்கம்

D. 1. இரு அதிகார முகாம்கள் தோற்றம்
   2. இரண்டாம் உலகப் போர்

38. முதலாவதிற்கும் இரண்டாவதிற்கும் இடையே பொருத்தப்பாட்டினை கொண்டிராத சோடி எது?

(1) A (2) B (3) C (4) D

39. இரண்டாவது தோற்றம் பெற முதலாவது காரணமாக அமைந்ததைக் காட்டும் சோடி எது?

(1) A (2) B (3) C (4) D

40. இரண்டாவதின் விளைவாக முதலாவது தோற்றம் பெற்றதைக் காட்டும் சோடி எது?

(1) A (2) B (3) C (4) D

දුරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

| 33 | T | II |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - අනුහුරු ප්‍රශ්න පත්‍රය- 2023 (2024)

**கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை மாதிரி வினாத்தாள் - 2023 (2024)**

**G. C. E. Ordinary Level Examination – Model paper - 2023 (2024)**

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**வரலாறு II** **நேரம்: 3 மணித்தியாலம்**

- பகுதி – I இல் முதலாம் வினா கட்டாயமானது
- பகுதி – II இல் நான்கு வினாக்களுக்கும், பகுதி III இல் ஒரு வினாவிற்கும் விடையளிக்குக
- எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடையளிக்குக.

01 (அ)

i. கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
**மாணிக்க கங்கை, மல்வத்து ஓயா, மாதுறுஓயா நீர்த்தேக்கம், பதவியா குளம், குருணாகல், கன்னொறுவை, சிலாபம், லங்காபட்டுன, ஊராத்தொட்ட, றைகம, பொத்தான, கற்பிட்டி**
(12 புள்ளிகள்)

ii. கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
**கருங்கடல், ஜெனோவா, கள்ளிக்கோட்டை, சுமாத்திரா, நாகசாகி, போர்த்துக்கல்.** (6 புள்ளிகள்)

(ஆ) i. கீழே ABCD எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. இலங்கையில் தரையிறங்கிய முதல் போர்த்துக்கேயன்
B. இலங்கையின் இறுதி நாயக்க வம்ச ஆட்சியாளன்
C. காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நோயாளர்களுக்காக அநுராபுரக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட வைத்தியசாலை
D. கியூபாவில் புரட்சி ஏற்பட்ட போது அங்கிருந்த ஆட்சியாளன் (4 புள்ளிகள்)

- A , B ஆகிய எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வினா இலக்க ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.



A

ii 1. படம் A யில் காட்டப்படும் ஆட்சியாளன் யார்?
2. இவர் தூது தொடர்பினை மேற்கொண்ட நாடு எது?
3. இத்தொடர்பின் மூலம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது யாது?
4. தற்போது இவ்வுருவச்சிலை காணப்படும் இடம் யாது? (4 புள்ளிகள்)



B

iii 1. படம் B இல் காட்டப்பட்டுள்ள நபரைப் பெயரிடுக.
2. இவரின் தாயகம் எது?
3. இவரால் பின்பற்றப்பட்ட அரசியல் கொள்கை யாது?
4. இவரால் ஆட்சியிலிருந்து நீக்கப்பட்ட நபர் யார்? (4 புள்ளிகள்)

## பகுதி II

02 i. இலங்கை வரலாறு தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ளக் கூடிய தொல்பொருள் மூலாதார வகைகளுள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

i. கீழே A – D வரை தரப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்புடைய தகவல்களை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.
(சிஹலஅட்டகதா, மகாவம்சம், அரிஸ்டோட்டில், வம்சத்தப்பகாசினி, குகைக்கல்வெட்டு, மெகஸ்தனிஸ், குன்றுக்கல்வெட்டு)

A. தீபவம்சம் எழுதப்படுவதற்கு முன்னர் எழுதப்பட்ட நூல்

B. மகாவம்சத்தின் விளக்கவுரையாக பாளி மொழியில் எழுதப்பட்ட டீகாவ

C. இலங்கையின் மிகப் பழமையான கல்வெட்டு வகை

D. இண்டிகா எனும் நூலை எழுதிய கிரேக்க நாட்டவர் (4 புள்ளிகள்)

ii. இலங்கை வரலாற்றைக் கற்பதில் மகாவம்சத்தின் முக்கியத்துவம் பற்றி இரு காரணிகளினூடாக விளக்குக. (5 புள்ளிகள்)

iii. வரலாற்றைக் கற்பதில் தொல்பொருள் மூலாதாரங்கள் முக்கியத்துவம் பெறும் விதத்தினை மூன்று காரணிகளினூடாக விளக்குக. (6 புள்ளிகள்)

03 i. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த தாழ்நில ஈரவலயக் குகைகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. இலங்கையின் கற்கால பிளைத்தோசின் யுகத்திற்குரிய ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ள பிரதேசங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் வாழ்க்கைமுறைப் பண்புகள் இரண்டினை விளக்குக. (5 புள்ளிகள்)

iv. முன் வரலாற்றுக்கால மனிதன் பயன்படுத்திய மயான வகைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

04 i. அரச நிர்வாகத்துடன் தொடர்புடைய மூன்று தாபனங்களையும் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. அதிகாரம் மத்தியமயப்படுத்தப்படுவதற்கு முன்னர் கமிகவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. பண்டைய ஆட்சியாளர்கள் தம்மால் நாட்டு மக்களுக்கு ஆற்றப்படவேண்டும் என எதிர்பார்த்த பணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. இலங்கையின் கீர்த்திமிக்க ஆட்சியாளன் என்றவகையில் வசபமன்னனால் ஆற்றப்பட்ட பணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

05 i. கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சி மையங்களின் ஆரம்ப ஆட்சியாளர்களைக் குறிப்பிடுக.

A. தம்பதெனிய

B. கம்பளை

C. கண்டி (3 புள்ளிகள்)

ii. கீழே A- D வரை தரப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்புடைய விடைகளை ஒழுங்கு முறையே குறிப்பிடுக.

A. இரண்டாம் நகராக்க காலப்பகுதியில் எகிப்து நாட்டுடன் வர்த்தக தொடர்புகளை மேற்கொள்வதில் அதிக ஆர்வம் காட்டிய மன்னன்.

B. கம்பளையின் அரசனான நான்காம் புவனேகபாகுவின் ஆட்சி காலத்தில் சமகால ஆட்சியாளனாக விளங்கிய ஐந்தாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிமையம்

C. ஆறாம் புவனேகபாகுவின் ஆட்சி காலத்தில் பஸ்துன்கோறளை பிரதேசத்தில் ஏற்பட்ட கிளர்ச்சி.

D. விஜயபாகு கொள்ளை இடம்பெற்ற இராசதானி. (4 புள்ளிகள்)

iii. பொலன்னறுவை இராசதானி வீழ்ச்சியடைவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. இரண்டாம் நகராக்க காலப்பகுதியின் கீர்த்திமிக்க ஆட்சியாளனான இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்கால முக்கியத்துவத்தினை மூன்று காரணிகளினூடாக விளக்குக. (6 புள்ளிகள்)

06 i. ஆசிய பிராந்தியத்தில் ஆட்சி அதிகாரத்தினை கைப்பற்றிக் கொண்ட ஐரோப்பிய இனத்தவர்கள் மூவரைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. பிரித்தானியரது கவனம் இலங்கை மீது திரும்பியமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. பிரித்தானியர் கண்டி இராச்சியத்தை கைப்பற்ற எண்ணியமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. கி.பி 1818 முதலாம் சுதந்திரப் போராட்டத்திற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

07 i. இலங்கைக்கான புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தங்களை வேண்டி பிரித்தானிய பேரரசிடம் கோரிக்கைகளை முன்வைத்த சங்கங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. கோல்புறூக் ஆணைக்குழுவினால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. பிரித்தானியரின் ஆட்சியின் காரணமாக இலங்கையின் சமூகத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பினூடாக அறிமுகப்படுத்தப்பட்ட வாக்களிப்பு முறைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

## பகுதி III

08 i. மறுமலர்ச்சிக் காலத்தில் இத்தாலியில் தோற்றம் பெற்ற எழுத்தாளர்கள் மூவரின் பெயர்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. மறுமலர்ச்சிக் காலத்துடன் தொடர்புடைய பின்வரும் விடயங்களுக்கு பொருத்தமான விடையினை ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

A. பியெட்டா சிலையினை நிர்மாணித்தவர்

B. கலிலியோ கலிலிக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர்.

C. புவிகோள வடிவமானது என்ற கருத்தை முதன் முதலில் முன்வைத்தவர்

D. நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்களை கண்டறிந்தவர். (4 புள்ளிகள்)

iii. மறுமலர்ச்சியானது உலகமயமாதலுக்கு ஏதுவாக அமைந்த விதத்தினை இரு காரணிகளினூடாக விளக்குக. (5 புள்ளிகள்)


iv. மறுமலர்ச்சியின் விளைவாக இலங்கையின் அரசியல் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)


09 i. பிரித்தானியாவில் நிலக்கரி படிவுகள் அதிகமாக காணப்படும் பிரதேசங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. கைத்தொழிற் புரட்சி காலப்பகுதியில் நிலக்கரி அகழ்வின் போது சுரங்க தொழிலாளர்கள் எதிர் கொண்ட பிரச்சினைகள் நான்கினைக் குறிப்பிடுக (4 புள்ளிகள்)

iii. கைத்தொழில் புரட்சியின் விளைவாக இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. கைத்தொழிற் புரட்சியின் விளைவாக ஏற்பட்ட சாதகமான விளைவுகள் இரண்டினையும் பாதகமான விளைவு ஒன்றினையும் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)




N
අප්‍රිකාව
ஆபிரிக்கா
Africa
ඉන්දියන් සාගරය
இந்து சமுத்திரம்
Indian Ocean

*****

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | අ. පො. ස. සාමාන්‍ය පෙළ 2023(2024)

# மாதிரி வினாத்தாளுக்கான விடைப்பத்திரம்
# අනුහුරු ප්‍රශ්න පත්‍රය සඳහා පිළිතුරු පත්‍රය
# Answers sheet for the Model paper

# ඉතිහාසය
# வரலாறு
# History






**கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை 2023(2024) மாதிரி வினாத்தாள் I- II**


අධ්‍යාපන අමාත්‍යාංශය - ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව
கல்வி அமைச்சு மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு

| வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல | வினா இல. | விடை இல | வினா இல. | விடை இல |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | **4** | 11 | **4** | 21 | **4** | 31 | **3** |
| 02 | **1** | 12 | **3** | 22 | **1** | 32 | **2** |
| 03 | **2** | 13 | **4** | 23 | **3** | 33 | **1** |
| 04 | **4** | 14 | **2** | 24 | **2** | 34 | **3** |
| 05 | **1** | 15 | **3** | 25 | **1** | 35 | **1** |
| 06 | **4** | 16 | **1** | 26 | **4** | 36 | **4** |
| 07 | **3** | 17 | **4** | 27 | **3** | 37 | **3** |
| 08 | **2** | 18 | **2** | 28 | **3** | 38 | **2** |
| 09 | **2** | 19 | **4** | 29 | **2** | 39 | **3** |
| 10 | **1** | 20 | **1** | 30 | **4** | 40 | **4** |

1. (அ) ( I )


ஊராத்தொட்ட
பதவியா குளம்
மல்வத்து ஓயா
லங்காபட்டுன
கற்பிட்டி
பொத்தான
மாதுறுஓயா நீர்த்தேக்கம்
சிலாபம்.
குருணாகல்
கன்னொறுவை
றைகம்
மாணிக்க கங்கை

(ii)




01 (ஆ) i.

A. லோரன்சோ டி அல்மேதா
B. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்
C. உபசக்க ரோகநாச
D. பிடல் கஸ்ரோ (4 புள்ளிகள்)

ii 1. பாதிகாபயன்
2. உரோம்
3. கண்ணாடி மணிகள்
4. ருவன்வெளிசாய முற்றத்தில்
5. (4 புள்ளிகள்)

iii 1. வீ. ஐ. லெனின்
2. ரஷ்யா
3. சமவுடமை
4. லியோன் ட்ரொஸ்கி

(4 புள்ளிகள்)

## பகுதி - ii

02 i. எழுத்தாவணங்கள், நாணயங்கள், சிதைவுகள், சித்திரங்கள், சிற்பங்கள், செதுக்கல்கள் (3 புள்ளிகள்)

ii.

A. சிஹலஅட்டகதா
B. வம்சத்தபகாசினி
C. குகைக்கல்வெட்டு
D. மெகஸ்தனிஸ் (4 புள்ளிகள்)

iii.

- தொடர்ச்சியான வரலாற்றை அறிந்து கொள்ள முடியும்.
- தீபவம்சத்தில் உள்ள குறைபாடுகள் நீக்கப்பட்டமை (விரிவு, கூறப்படாத விடயங்கள் கூறப்பட்டுள்ளமை)
- சம்பவங்கள் கல் வெட்டுக்களில் உறுதி செய்யப்பட்டுள்ளமை (உதாரணங்களுடன் விளக்கியிருத்தல் வேண்டும்) (5 புள்ளிகள்)

iv.

- இலக்கிய மூலாதாரங்களைவிட நம்பக தன்மை வாய்ந்தவை
- சமகாலத்தில் உருவாக்கப்பட்டமை
- சமகால தகவல்களை உறுதிப்படுத்தும் ( நாணயங்கள்) (6 புள்ளிகள்)

03 i. பாகியன்கல, பட்டதொம்பலென, கித்துல்கல பெலிலென (3 புள்ளிகள்)

ii. இரணைமடு, இரத்தினபுரி (4 புள்ளிகள்)

iii.

- நாடோடி வாழ்க்கை
- வேட்டையாடுதல்
- குழுவாக வாழ்தல்
- மரணசடங்கு முறைகள் (5 புள்ளிகள்)

iv.

- கல்லறை மயானம்
- களிமண் ஓடக்கல்லறை மயானம்
- பரணி மயானம் (6 புள்ளிகள்)

04 i. சட்டம் , நீதி, நிர்வாகம் (3 புள்ளிகள்)

ii.

- கிராம குளங்களை நிர்வகித்தல்
- கிராம பிரச்சினைகளை தீர்த்தல்
- பொது நிகழ்வுகளுக்கு தலைமை தாங்குதல்
- கிராமங்களிடையே திருமணத்தொடர்புகளை ஏற்படுத்தல்
- கிராமங்களிடையே பண்டமாற்று முறைகளை மேற்கொள்ளல் (4 புள்ளிகள்)

iii. நாட்டை பாதுகாத்தல், பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல், ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்தல் (5 புள்ளிகள்)

iv.

- பாரிய குளங்களை கட்டுவித்தமை
- வரிமுறையை ஒழுங்குபடுத்தியமை
- பிரதேச ஆட்சியை ஏற்படுத்தியமை
- விகாரைகளுக்கு கொடுப்பணவு வழங்கியமை (6 புள்ளிகள்)

05 i.

A. மூன்றாம் விஜயபாகு
B. நான்காம் புவனேகபாகு
C. சேனாசம்மத விக்கிரமபாகு (3 புள்ளிகள்)

ii.

A. முதலாம் புவனேகபாகு
B. தெடிகம
C. சிங்கள சங்கய
D. கோட்டை (4 புள்ளிகள்)

iii.

- பலவீனமான மன்னர்கள் ஆட்சி பீடம் ஏறியமை
- கலிங்க , பாண்டிய வம்சங்களுக்கிடையிலான அதிகார போட்டி
- பொருளாதார வீழ்ச்சி
- கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு (5 புள்ளிகள்)

iv.

- கலிங்க மாகனை வெற்றிகொண்டமை
- சந்திரபானுவை வெற்றிகொண்டமை
- இலக்கிய வளர்ச்சிக்கு உதவியமை
- தேவபதிராஜ ஊடாக பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தியமை (6 புள்ளிகள்)

06 i. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்சியர் (3 புள்ளிகள்)

ii. இலங்கையின் அமைவிடம், கறுவா உட்பட வர்த்தக பொருட்களை பெற்றுக் கொள்ளல் (4 புள்ளிகள்)

iii.

- கொழும்பு – திருகோணமலை இடையிலான போக்குவரத்திற்கு கண்டி தடையாக காணப்பட்டமை
- கடவை வரி அறவிட்டமை
- கரையோர கிளர்ச்சிக்கு கண்டி மன்னன் உதவுவதாக ஏற்பட்ட சந்தேகம்
- கண்டி மன்னன் பிரான்சியரின் உதவியை நாடலாம் என்ற அச்சம்
- கரையோர மக்களும் கண்டி மன்னனை தமது ஆட்சியாளனாக கருதியமை
- பாதுகாப்பு செலவு இரட்டிப்பானமை (5 புள்ளிகள்)

iv.

- சுதந்திரத்தை இழந்தமை, அரசன் இல்லாமை பற்றிய மனவேதனை
- சமய கலாசார பாதுகாப்பு தொடர்பான பிரச்சினை
- மலைநாட்டு பிரதானிகளுக்கு எற்பட்ட தாக்கம் (6 புள்ளிகள்)

07 i. கரைநாட்டு உற்பத்தியாளர் சங்கம், யாழ்பாணச்சங்கம், சிலாபச் சங்கம் (3 புள்ளிகள்)

ii.

- சட்டவாக்க சட்ட நிர்வாக கழகங்களை அமைத்தல்
- நாட்டை ஐந்து மாகாணங்களாக பிரித்தல்
- கட்டாய இராசசேவை முறையினை ஒழித்தல்
- அரசின் வர்த்தக ஏகபோக உரிமையை நீக்குதல்
- கண்டியையும் கரையோரத்தினையும் ஒன்றிணைத்தல். (4 புள்ளிகள்)

iii.

- மேலைத்தேய கலாசாரம் பரவியமை
- ஆங்கில மொழிமூலமான மேலைத்தேய கல்விமுறை அறிமுகமானமை
- விடுமுறைகால விடுதிகள், இரவு களியாட்ட விடுதி முறைகள் அறிமுகமானமை
- மேலைத்தேய ஆடையணிகள் பழக்கவழக்கங்கள் உருவானமை
- படித்த மத்தியதர வர்க்கம் தோற்றம் பெற்றமை
- தென்னிந்திய கூலித்தொழிலாளர்கள் இலங்கை சமூகத்துடன் இணைந்தமை

(5 புள்ளிகள்)

iv.

- ஜனாதிபதி தேர்தல்
- விகிதாசார பிரதிநிதித்துவ முறை
- பொதுசன அபிப்பிராய தேர்தல் (6 புள்ளிகள்)

பகுதி III

08 i. தாந்தே, பெற்றாக், பொக்காசியோ (3 புள்ளிகள்)

ii.

A. மைக்கல் அஞ்சலோ
B. செயற்பாட்டு விஞ்ஞானத்தின் தந்தை
C. நிக்கலஸ் கொப்பனிகஸ்
D. பெரசல்ஸ் (4 புள்ளிகள்)

iii.

- நாடுகாண் பயணத்தின் விளைவாக அரசியல், வர்த்தக, பொருளாதார, பண்பாட்டு ரீதியாக ஐரோப்பாவுக்கும் உலகின் ஏனைய பகுதிகளுக்கும் இடையே தொடர்புகள் ஏற்பட்டமை
- ஐரோப்பிய சிந்தனைகள் இலக்கியம் என்பன ஏனைய நாடுகளுக்கு சென்றடைந்தமை
- செல்வந்தர்களின் பிள்ளைகள் கல்வி பெற ஐரோப்பாவிற்கு சென்றமை
- ஐரோப்பியர் தமது குடியேற்ற நாடுகளில் தாம் பின்பற்றிய சமயத்தை பரப்பியமை

(5 புள்ளிகள்)

iv.

- மன்னராட்சி வீழ்சியடைந்தமை
- அரசியல் யாப்பு சீர்த்திருத்தங்கள் அறிமுகமானமை
- பாராளுமன்ற ஆட்சி அறிமுகம்
- கட்சிகள் தோற்றம் பெற்றமை
- உரோமன் டச்சு சட்டம் அறிமுகமானமை
- நீதிமன்ற தொகுதி அறிமுகமானமை (6 புள்ளிகள்)

09 i. லங்காசயர், யோக்சயர், தென்வேல்ஸ் (3 புள்ளிகள்)

ii.

- அகழ்வின் போது நீரை வெளியேற்றுதல்
- சுரங்கத்தினுள் வெப்பம் அதிகரித்தல்
- சுரங்கத்தினுள் விசவாயு உருவாதல்
- சுரங்கத்தினுள் வெளிச்சத்தை ஏற்படுத்தல் (4 புள்ளிகள்)

iii.

- பெருந்தோட்ட பயிர்ச் செய்கை
- போக்குவரத்து, தொடர்பாடல்
- இயந்திர சாதனங்கள் கொண்டுவரப்பட்டமை

- கூலித்தொழிலாளர் வர்க்கம் உருவானமை
- மத்தியதர வர்க்கம் தோன்றியமை
- முதலாளித்துவ பொருளாதார வளர்ச்சி
- வங்கிகள் தோற்றம் பெற்றமை
- வர்த்தக நகரங்கள் தோன்றியமை (5 புள்ளிகள்)

iv. சாதகமான விளைவுகள்

- மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைந்தமை
- தொழில் வாய்ப்புக்கள் அதிகரித்தமை
- போக்குவரத்து, தொடர்பாடல் வளர்ச்சி
- நிதி நிறுவனங்கள், வங்கிகள் தோற்றம் பெற்றமை

பாதகமான விளைவு

- நகரமயமாதல் தொடர்பான பிரச்சினைகள்
- போதைபொருள் பாவணை
- சிறுவர் துஷ்பிரயோகம்
- சூழல் மாசடைதல்
- முதலாளி தொழிலாளி வர்க்க பேதம் ஏற்பட்டமை
- (இது போன்ற பொருத்தமானவிடைகளுக்கு புள்ளி வழங்கவும்)

(6 புள்ளிகள்)